ஒதுக்கப்படுகிற பணம் அதிகப் பஞ்சாயத்துக்கள் உள்ள ஒன்றியங் களுக்குப் போதவில்லை. இவற்றையும் இரண்டாகப் பிரிக்க வகை செய்ய முடியுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மக்கள் எண்ணிக்கை, நிதி வசதி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு ஒன்றியங்கள் அமைக்கப்படுகிறபோது சில இடங்களில் அதிகப் பஞ்சாயத்துக்கள் வந்துவிடுகின்றன. ஒன்றியங்களின் எண்ணிக்கையை அதிகப் படுத்தலாம் என்றாலும் மத்திய அரசின் அங்கீகாரம் தேவைப் படுகிறது. இவை எல்லாம் நிர்வாகச் சீர்திருத்தக் கமிஷன் பரிந் துரையின்மேல் கவனிக்க வேண்டியதாக இருக்கிறது.

குத்தாலத்தை நகராட்சியாக்கல்.

* 533 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள் ஆட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் தாலுக்கா குத்தாலம் மேஜர் பஞ்சாயத்தினை நகராட்சி மன்றமாக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனை யிலுள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : குத்தாலம் பேரூராட்சி நகராட்சியாக மாறுவதற்கு என்ன தகுதியினைப் பெறவேண்டியுள்ளது என்பதைத் தெரிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : 20 ஆயிரம் மக்கள் இருக்கவேண்டும். அதன் வருமானம் 1 லட்சத்திற்கு மேல் இருக்க வேண்டும். 1969–70 கணக்குப்படி அதன் வருமானம் 1 லட்சம் இருந்தாலும், ஜனத்தொகை ஒன்பதாயிரம் சொச்சம் தான் இருக்கிறது.

Treatment of in-patients.

* 534 Q.—Dr. H. V. Hande : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether this Government has any proposal to restrict the General Hospital and other big hospitals in the State for treatment of in-patients only; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) இத்திட்டம் ஆய்வு நிலையில் உள்ளது. முடிவாகத் தீர்மானிக்கப்படவில்லை.

Dr. H. V. Hande : Is it a fact that since a number of years the Government is seized of the matter and that this General Hospital is not able to function in the manner in which the Government wanted it to function because of the extraordinary